6th November 1965]

Linking Vellar with Willingdon Reservoir

* 321 Q.—Sri K. NARAYANASWAMY PILLAI : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether there is any proposal to construct flood banks connecting Willingdon Reservir and the river Vellar; and

(b) if so, the details thereof?

The Hon. Sri V. RAMAIAH : (a) No.

(b) Does not arise.

மணியாற்றின் குறுக்கே அணை

* 322. கேள்வி—திரு. ஆ. தங்கவேலு : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) கள்ளக்குறிச்சி வட்டம், சங்கராபுரம் பகுதியிலுள்ள மணியாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. தங்கவேலு : தலைவர் அவர்களே, மணியாற்றில் அணை கட்டுவதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டு, மத்திய சர்க்காருக்கு அனுமதிக்கு அனுப்பப்பட்டு இருப்பதாக சென்ற ஆண்டு சொல்லப்பட்டதே, எப்பொழுது அது நிறைவேற்றப்படும் என்று அறியலாமா ?

கனம் திரு. வெ. ராமையா : திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய சர்க்காருக்கு அனுமதிக்கு அனுப்பப்பட்டு இருப்பது என்றால் அது வேறு திட்டமாக இருக்கும். கனம் அங்கத்தினர் தனிக்கேள்வி போட்டால், விவரம் கொடுக்கலாம்.

வராக நதியின் குறுக்கே அணை

* 323 கேள்வி.—திரு. கு. கோபால கவுண்டர் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) செஞ்சி தாலுகா வராக நதியில் உள்ள கடப்பட்டு அணையை ரிசர்வாயராகக் கட்டுவதற்கு நீர்ப்பாசன இலாகா (திட்டம் பிளானிங் சர்க்கிள்) சூபரின்டென்டிங் இன்சினியர் அவர்கள் பார்வையிட்டு அரசாங்கத்திற்கு ரிப்போர்ட் அனுப்பி உள்ளாரா ?

(இ) அதன் பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?